[1970 மார்ச் 20

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** தஞ்சை மாவட்டம், திருவாரூரில், தவிட்டு எண்ணெய் ஆலை ஒன்று 19,75,000 ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப் பட்டிருக்கிறது. இந்த ஆலை நாள் ஒன்றுக்கு முப்பது டன், தவிட்டிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் சக்தியுள்ளது. இந்த ஆலையை அமைப்பதற்கு 4,93,500 ரூபாய், பங்குத் தொகையாகவும், 9,87,500 ரூபாய், நீண்டகாலக் கடனுகவும் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** தலைவர் அவர்களே, இந்த தவிட்டு எண்ணெய் ஆலை வேலை தொடங்கி, அதிகமாக எண்ணெயை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** தலைவர் அவர்களே, இந்த ஆலை கட்டி முடிக்கப்பட்டு, 8-12-1968-ம் தேதியிலிருந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

**திரு. வி. டி. அண்ணுமலை:** வட ஆற்காடு மாவட்டத்திலும் நெல் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. செய்யாரில் ஒரு நவீன அரிசி ஆலை ஒன்றும் நிறுவப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே தவிட்டில் இருந்து எண்ணை எடுக்கும் ஆலை ஒன்றை ஏற்படுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** தவிட்டில் இருந்து எண்ணை எடுப்பதற்கு பத்து நவீன அரிசி ஆலைகளில் கிடைக்கும் தவிடு தேவைப் படுகிறது. செய்யாரில் இப்போதுதான் ஒரு நவீன அரிசி ஆலை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இன்னும் இதுபோல பல நவீன அரிசி ஆலைகள் அந்த மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும். அவைகள் ஏற்பட்ட பிறகு தவிட்டு எண்ணை ஆலை ஒன்றும் அங்கே துவங்கப்படும். அது கூட்டுறவுத் துறையில் தான் துவங்கப்படவேண்டும் என்று இல்லை. ஒரு டன் எண்ணை மூவாயிரம், மூவாயிரத்து ஐநூறுவரை விற்கிறது. நூறு டன் தவிட்டில் மூன்று, நான்கு மூழு டன் எண்ணை வரக்கூடும். இது தனியார் துறையில் துவங்கப்படுவ தற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டாலும், அரசு வேண்டிய உதவிகளைச் செய்யும்.

**திரு. கே. போஜன்:** இந்த அரிசித் தவிட்டில் இருந்து கிடைக்கிற எண்ணெய் எந்த எந்த வகையில் உபயோகப்படுத்தப்படலாம்? மனிதர்கள் உண்பதற்கு நல்ல சக்தி உடையதாக இருக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** இந்த எண்ணெய் சுத்தப்படுத்தப் படாமலேயே சோப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. சுத்தப் படுத்திஞல் மனிதர்களுக்கு நல்ல சக்தி தரும் உணவாக இருக்கும். சுத்தப் படுத்தி தேங்காய் எண்ணெயைப்போல பயன்படுத்துவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

**பச்சபனட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கம்**

*** 466 வின.—திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) ஒசூர் தாலுக்கா, பச்சபனட்டி என்ற ஊரில், பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில், சுமார் மூன்று லட்சம் ரூபாய் வரை மோசடி நடந்த தாக வழக்கு தொடரப்பட்டதா?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்கள் மீது?

(உ) எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

(எ) எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரையில் இந்த மோசடி நடந்துள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : பச்சபனட்டி கூட்டுறவு நாணய சங்கத்தில் ரூ. 19,070 வரை கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. அது பற்றி புலன் விசாரணை, காவல்துறை நடத்துகிறது. புலன் விசாரணை முழுவதும் முடியவில்லை. முடிந்தபின் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : இந்தச் சங்கத்தில் எந்த ஆண்டு முதல் இந்த ஊழல் ஏற்பட்டுள்ளது? இப்படித் தொடர்ந்து ஊழல் நடைபெறா திருக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? இதுபோன்ற மற்ற சங்கங்களிலும் நடைபெறாதிருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்கிற விவரம் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : இந்தக் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் 24-12-1964 முதல் 30-3-1967 வரை ஊழல் நடந்திருக்கிறது. அதற்குப் பிறகு இது கண்டுபிடிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. எட்டுப் பேர்கள் கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டிருக் கிறார்கள். வழக்கு இருக்கிறது.

இதைத்தவிர, மற்றச் சங்கங்களைப் பொறுத்தவரையில், என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது என்பது கொள்கையைப் பொறுத்த விஷயம். அதற்கு ஏப்ரல் 2-ஆம் தேதிதான் பதில் சொல்ல முடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Has this kind of misappropriation happened only in this particular co-operative society or is it happening in other societies in Hosur taluk?

THE HON. THIRU SI. PA. ADITANAR : I do not have with me, at the moment, statistics regarding misappropriaton, which has happened in other co-operative societies in Hosur taluk. I have given the facts and figures regarding this particular society on which this question was raised.

### *Chit funds in Tiruchirappalli district*

* 467 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether the Government are aware of a large increase of chit funds in Tiruchirappalli district in recent months; and

(*b*) if so, the steps taken thereon?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்** : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டம், 1-12-1969 முதல் இம்மாவட்டத்திற்கும் இதற்குமுன் இச்சட்டம் செயலில் இராத பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் நடைபெறும் சீட்டுக்கள் இனி இச்சட்டத்தின் விதித்துறைகளால் முறைப்படுத்தப்படும்.